SINCE 2013

We Shine Academy®

guiding you to get through

TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

# DAILY CURRENT AFFAIRS ON 26/03/2026









**1.College of Engineering, Guindy (1794)**
**2.Alagappa College of Technology (1944)**
**3. Madras Institute of Technology (1949)**

**1. கிண்டி பொறியியல் கல்லூரி (1794)**
**2. அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி (1944)**
**3. சென்னை தொழில்நுட்ப நிறுவனம் (1949)**




## ரஷியாவிடம் இருந்து 60,000 பீப்பாய் கச்சா எண்ணெய் கொள்முதல்

**புது தில்லி, மார்ச் 25:** ரஷியாவிடம் இருந்து ஏப்ரல் மாதத் தேவைக்காக இந்தியா 60,000 பீப்பாய் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்துள்ளது.

மத்திய கிழக்குப் போரால் எரிபொருள் பிரச்னை, முக்கியமாக சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

முன்னதாக, 3 ஆண்டுகளுக்கு முன்பு உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்ததால் ஐரோப்பிய நாடுகள் ரஷியாவிடம் கச்சா எண்ணெய் கொள்முதலை நிறுத்தின. இதையடுத்து, இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு சலுகை விலையில் கச்சா எண்ணெய் ரஷியா விற்பனை செய்தது.

ஆனால், ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என்று இந்தியாவுக்கு அமெரிக்கா கடந்த சில மாதங்களாக கடுமையான அழுத்தம் கொடுத்து வந்தது. இதையடுத்து, ரஷிய கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா படிப்படியாகக் குறைத்தது.

இந்த நிலையில், ஈரானுடன் போர் தொடங்கிய பிறகு சர்வதேச அளவில் எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் எழுந்ததால், ரஷிய கச்சா எண்ணெய்யை வாங்கிக் கொள்ள இந்தியாவுக்கு அனுமதியளித்தது.

# உலகின் சிறந்த 50 பல்கலை.யில் இந்திய கல்வி நிறுவனங்கள்

**புது தில்லி, மார்ச் 25:** உலகின் சிறந்த 50 பல்கலைக்கழகங்களில் இந்தியாவைச் சேர்ந்த 4 ஐஐடி, ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

லண்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் குவாக்குராலி சைமண்ட்ஸ் எனும் தனியார் நிறுவனம், உலக பல்கலைக்கழகங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது. 100 நாடுகளில் உள்ள 1,900 பல்கலைக்கழகங்களில் இருக்கும் 21,000 கல்வித் திட்டங்களை ஆய்வு செய்து, இந்தப் பல்கலைக்கழகங்களை அந்நிறுவனம் தரவரிசைப்படுத்தியுள்ளது.

2024-ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் இந்தியாவை சேர்ந்த 12 கல்வி நிறுவனங்கள் இடம்பிடித்திருந்தன. தற்போது 2 மடங்குக்கும் அதிகமாக 27 கல்வி நிறுவனங்கள் அந்தத் தரவரிசையில் இடம்பிடித்துள்ளன.

அதன்படி, தன்பாத்தில் உள்ள ஐ.எஸ்.எம். பல்கலைக்கழகம் 21-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. அகமதாபாதில் உள்ள ஐஐஎம் நிறுவனம் 21-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மும்பை, காரக்பூர், சென்னை, தில்லி ஐஐடி ஆகியவையும் முதல் 50 இடங்களுக்குள் வந்துள்ளன. தில்லி ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம், பிஐடிஎஸ் நிறுவனம் ஆகியவையும் 50 இடங்களுக்குள் வந்துள்ளன.

# மூன்றாம் பாலினத்தவர் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

**புது தில்லி, மார்ச் 25:** மூன்றாம் பாலினத்தவர்கள் தங்களை சுயமாக அங்கீகரிக்கும் பிரிவை நீக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதா, மாநிலங்களவையில் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதா ஏற்கெனவே மக்களவையில் நிறைவேறிய நிலையில், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

'மூன்றாம் பாலினத்தவர்' (திருநங்கை-திருநம்பி) என்ற வார்த்தைக்கு துல்லிய வரையறை அளிப்பதுடன், அந்த பாலினத்தவருக்கு இழைக்கப்படும் குற்றங்களின் தீவிரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தண்டனைகளை அதிகரிக்கச் செய்யும் நோக்கில், மூன்றாம் பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதா-2026-ஐ மத்திய அரசு கொண்டுவந்தது.

மூன்றாம் பாலினத்தவர் தங்களை சுயமாக அங்கீகரிக்கும் பிரிவை நீக்குவதுடன், உரிய மருத்துவ ஆதாரத்தை கட்டாயமாக்க வகை செய்யும் இந்த மசோதா, மக்களவையில் கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், மாநிலங்களவையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு புதன்கிழமை விவாதம் நடைபெற்றது. அப்போது, மசோதாவின் அம்சங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்க்கட்சிகள், அதை நாடாளுமன்ற குழு ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தின.

விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வீரேந்திர குமார், 'உடல் ரீதியிலான பிரச்னைகளால் பாலின பாகுபாடுகளை எதிர்கொள்பவர்களுக்கு மட்டுமே பாதுகாப்பளிக்கும் நோக்கில் சட்ட திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மசோதாவின் மூலம் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உரிய சட்ட அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்ந்து உறுதி செய்யப்படும். அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நிர்வாக ரீதியிலான தெளிவை கொண்டுவரும்' என்றார்.

இதையடுத்து, எதிர்க்கட்சிகள் முன்மொழிந்த திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டு, குரல் வாக்கெடுப்பின் மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது.

# மாற்றியமைக்கப்பட்ட 'உடான்' திட்டத்துக்கு ரூ.28,840 கோடி

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புது தில்லி, மார்ச் 25:** பிராந்திய விமானப் போக்குவரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட 'உடான்' திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் வழங்கியது.

ரூ.28,840 கோடி ஒதுக்கீட்டுடன் அடுத்த 10 ஆண்டுகளுக்கு (2026-27 முதல் 2035-36 வரை) செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், விமான நிலையங்கள் மேம்பாடு, செயல்பாடு-பராமரிப்புக்கான ஆதரவு, நவீன ஹெலிபேடுகள் கட்டமைப்பு மற்றும் உள்நாட்டு விமான கொள்முதலுக்கான ஆதரவை உள்ளடக்கியதாகும்.

தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அவர் கூறுகையில், 'மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டத்தின்கீழ், இதுவரை பயன்பாட்டில் இல்லாத ஓடுதளங்களைக் கொண்ட 100 விமான நிலையங்கள் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் மேம்படுத்தப்படும். இந்தப் பணிகளுக்காக, அடுத்த 8 ஆண்டுகளில் ரூ.12,159 கோடி ஒதுக்கீடு செய்ய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதேபோல், குறிப்பிட்ட வழித்தடங்களில் விமானங்களை இயக்குவதால், விமான நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டுவதற்கான மானிய நிதிக்கு அடுத்த 10 ஆண்டுகளுக்கு ரூ.10,043 கோடி ஒதுக்கப்படும்' என்றார்.

மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டத்தில் பிற பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'அடுத்த 8 ஆண்டுகளில் தலா ரூ.15 கோடி செலவில் 200 நவீன ஹெலிபேடுகள் கட்டமைக்கப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு சுமார் ரூ.3,661 கோடியாகும்.

முன்னுரிமை - லட்சிய மாவட்டங்களில் கடைசி தொலைவு இணைப்பு மற்றும் அவசரகால செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் நவீன ஹெலிபேடுகள் கட்டமைக்கப்பட உள்ளன. 441 சிறிய விமான நிலையங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கு ஆதரவளிக்க அடுத்த 3 ஆண்டுகளுக்கு ரூ.2,577 கோடி நிதி ஒதுக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய விமானப் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் கடந்த 2016-இல் தொடங்கப்பட்ட உடான் திட்டம், இந்த ஆண்டு இறுதியில் நிறைவடையவுள்ளது. இதையொட்டி, மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

தற்போதைய திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 95 விமான நிலையங்கள், பிரத்யேக ஹெலிகாப்டர் தளங்கள் மற்றும் நீர் பரப்பில் செயல்படும் விமான தளங்களில் இருந்து 663 வழித்தடங்கள் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த வழித்தடங்களில் மொத்தம் 16 கோடி பயணிகளுடன் 3.41 லட்சம் விமான சேவைகள் இயக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐவிஎஃப்ஆர்டி திட்டம் நீட்டிப்பு: நாட்டின் குடியேற்ற நடைமுறையை நவீனமாகவும், பாதுகாப்பானதாகவும் மாற்றும் நோக்கில், குடியேற்றம்-நுழைவு இசைவு (விசா)-வெளிநாட்டினர் பதிவு மற்றும் கண்காணிப்புத் திட்டத்தை (ஐவிஎஃப்ஆர்டி) அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கவும், இதற்காக ரூ.1,800 கோடி நிதி ஒதுக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.







The National Environment Tribunal Act was passed in the year

(A) 1994 (B) 1975

(C) 1995 (D) 1974


(E) Answer not known

தேசிய சுற்றுச்சூழல் நிர்வாகத் தீர்ப்பாயச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(A) 1994 (B) 1975

(C) 1995 (D) 1974

(E) விடை தெரியவில்லை




**The National Environment Tribunal Act, 1995**

-enacted to provide for strict liability for damages arising from accidents during the handling of hazardous substances.

- It aimed to offer compensation to victims and for environmental damage.
- replaced by the National Green Tribunal Act, 2010.

**தேசிய சுற்றுச்சூழல் தீர்ப்பாயச் சட்டம், 1995** என்பது, அபாயகரமான பொருட்களைக் கையாளும்போது ஏற்படும் விபத்துக்களினால் விளையும் சேதங்களுக்குக் 'கடுமையான பொறுப்பை' (strict liability) ஏற்படுத்தும் நோக்கில் இயற்றப்பட்ட ஓர் இந்தியச் சட்டமாகும். தேசிய பசுமைத் தீர்ப்பாயச் சட்டம், 2010-இன் மூலம் இச்சட்டம் ரத்து செய்யப்பட்டு மாற்றியமைக்கப்படுவதற்கு முன்புவரை, 'குற்றமற்ற பொறுப்பு' (no-fault) எனும் கோட்பாட்டைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கும் சுற்றுச்சூழல் சேதங்களுக்கும் இழப்பீடு வழங்குவதையே இது முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தது.

| Match the following: | | | |
|---|---|---|---|
| (a) | Institute of Veterinary preventive medicine | 1. | Madhavaram |
| (b) | Livestock research station | 2. | Ranipet |
| (c) | Tamilnadu Veterinary and animal sciences university | 3. | Nandanam |
| (d) | Tamilnadu livestock development corporation | 4. | Kattupakkam |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கால்நடை நோய்த்தடுப்பு மருத்துவ நிறுவனம் | 1. | மாதவரம் |
| (b) | கால்நடை ஆராய்ச்சி நிலையம் | 2. | இராணிப்பேட்டை |
| (c) | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | 3. | நந்தனம் |
| (d) | தமிழ்நாடு கால்நடை அபிவிருத்திக் கழகம் | 4. | காட்டுப்பாக்கம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

Infectious Bovine Rhinotracheitis (IBR) disease is caused by ____________ in cattle.

(A) bacteria
(B) virus
(C) fungus
(D) protozoa
(E) Answer not known

கால்நடைகளில் போவின் ரைனோட்ராக்கிடிஸ் (IBR) தொற்று நோயை ஏற்படுத்துபவை ____________

(A) பாக்டீரியா
(B) வைரஸ்
(C) பூஞ்சை
(D) புரோட்டோசோவா
(E) விடை தெரியவில்லை




Find the incorrect statement :

(i) Tamil Nadu excels other states in lignite coal reserves and production.

(ii) It has 90% of reserves in the country.

(iii) Neyveli lignite field is located in Villupuram District.

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (iii) only

(D) (ii) only

(E) Answer not known

தவறான கூற்றினைக் கண்டுபிடி :

(i) மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு லிக்நைட் எரிபொருளின் இருப்பு மற்றும் உற்பத்தியினைக் கொண்டது.

(ii) இது நாட்டின் 90 சதவீத லிக்நைட் இருப்பினை கொண்டுள்ளது.

(iii) நெய்வேலி நிலக்கரி சுரங்கம் விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.


(A) (i) மட்டும்


(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) (ii) மட்டும்

(E) விடை தெரியவில்லை




Among the districts of Tamil Nadu, which has 482 million tonnes of Iron ore reserves with a low grade?

(A) Salem
(B) Trichy
(C) Madurai
(D) Coimbatore
(E) Answer not known

தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் கூடுதலாக 482 மில்லியன் டன் இரும்பு தாது குறைந்த தரத்துடன் உள்ளது?

(A) சேலம்
(B) திருச்சி
(C) மதுரை
(D) கோயம்புத்தூர்
(E) விடை தெரியவில்லை